# இடைப்பாடி நகராட்சி

## 31.08.2023–ம் தேதியில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

இடைப்பாடி நகராட்சியில் 77 வது சுதந்திர தினவிழா கொண்டாட ஏதுவாக ஒலிபெருக்கி, நாற்காலிகள் அமைக்கவும் மற்றும் அலுவலக வளாகம் மின் விளக்குகளால் அலங்கரித்தல், பூமாலை பழங்கள் மற்றும் பொன்னாடைகள் ஆகியவை வாங்கவும் ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.25000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து மேற்படி செலவுகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.822/2022/எச்1)

| தீர்மான எண்:455 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 2

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்18205/2023/SBM2, நாள் 28.07.2023–ல் மனித கழிவுகளை அகற்றும் பணியாளர்களை தடுப்பது மற்றும் அவர்களின் மறுவாழ்வு சட்டம் 2013–ன்படி நகராட்சிகளில் உள்ள பாதாள சாக்கடைகள் மற்றும் செப்டிக் டேங்குகளை பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்வது குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படுத்தும் விதமாக ஆத்தூர், மேட்டூர், இடைப்பாடி, நரசிங்கபுரம், இடங்கணசாலை மற்றும் தாரமங்கலம் ஆகிய நகராட்சிகளில் உள்ள கழிவுநீர் வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் வாகன உதவியாளர்கள் மொத்தம் 39 நபர்களுக்கு 04.08.2023 வெள்ளிகிழமை இடைப்பாடி நகராட்சி அலுவலகத்தில் உரிய பயிற்சி வழுங்குமாறும், மேற்படி பயிற்சியில் கலந்து கொள்ளும் 39 நபர்களுக்கு மதிப்பூதியம் (39x500), மதிய உணவு மற்றும் காலை,மாலை டீ பிஸ்கட் ரூ250/–க்கு மிகாமல்(39x250) மற்றும் பயிற்சிக்கு தேவையான Training kit வழுங்குமாறும், மேற்படி செலவினம் SBM திறன் மேம்பாட்டு நிதியின் கீழ் திரும்ப வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பாதாள சாக்கடைகள் மற்றும் செப்டிக் டேங்குகளை பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்வது குறித்த பயிற்சியில் கலந்து கொள்ளும் 39 நபர்களுக்கு மதிப்பூதியம் ரூ19500/–, மதிய உணவு மற்றும் காலை,மாலை டீ பிஸ்கட் ரூ9750 மற்றும் பயிற்சிக்கு தேவையான Training kit, பிளக்ஸ் பேனர் மற்றும் சான்றிதழ்கள் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ5750/– மொத்தம் ரூ35000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பயிற்சியினை வழங்க அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.303/2021/எச்1)

| தீர்மான எண்:456 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 3

இடைப்பாடி நகராட்சி பகுதிகளில் அதிகளவில் தெரு நாய்கள் சுற்றித் திரிகின்றது. மேற்படி நாய்களுக்கு இனப்பெருக்க கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல் மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி மேற்கொள்ள, விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு விதிகள் 2022–ன்படி அரசாணை எண்.01, கால்நடை, மீன்வளம், பால்வளம் மீனவத் துறை நாள் 17.03.2023–ல் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், தடுப்பூசி போடுவதற்கும் கீழ்கண்டவாறு தொகை நிர்ணயித்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அ) தெரு நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை மையத்தில் சேர்த்தல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் பிடித்த இடத்தில் விடுதல் நாய் ஒன்றுக்கு ரூ.200/–

ஆ) நாய்களின் அறுவை சிகிச்சைக்கு முன், பின் உணவு, மருந்து, நாய்களை கவனித்தல் உள்ளிட்டவை நாய் ஒன்றுக்கு ரூ.1450/– ஆக மொத்தம் ரூ1650/–

மேற்கண்ட தொகை விகிதத்தில் தற்போது முதல் கட்டமாக 300 தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி போடும் பணியினை விலங்குகள் நல வாரிய அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1622/2021/எச்1)

| தீர்மான எண்:457 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 4

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் JCB இயந்திரம் எண் TN52E 2066 (Excavator Loader) வாகனத்தின் டீசல் பம்பு, வாட்டர் பம்பு, டைனமோ ஆகியவை பழுதடைந்துள்ளதை மாற்றவும், பக்கிட் பிரண்டு, பேக் மற்றும் டீத்கட்டர் NO13 தேய்ந்துவிட்டதால் அதனை சரி செய்ய வாகனம் பெறப்பட்ட சூர்யபாலா எர்த் மூவர்ஸ் நிறுவனத்தில் ஒப்படைத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ65000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1476/ 2020 / எச்1)

| தீர்மான எண்:458 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 5

இந்நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் உணவு உண்ண வருபவர்களுக்கு உணவுக்காக வழங்கப்பட்டு வரும் டோக்கன் மிகவும் குறைவாக உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி தேவையான அளவு உள்ளூர் அச்சகத்தில் விலைப்புள்ளி பெற்று அச்சடித்து கொள்ளவும் மற்றும் அம்மா உணவகத்திற்கு 2023—2024 ஆம் ஆண்டிற்கு தேவையான சில்லரை செலவினங்கள் மேற்கொள்ளவும் செலவினத்தொகையாக ரூ.2,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொதுமக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று வருவாய் நிதியில் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2494/2014/சி1)

| தீர்மான எண்:459 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள்6

இந்நகராட்சிக்குட்பட்ட வீட்டுவசதி வாரியம் நீரேற்று நிலையம் (Housing Board Boosting Station) மற்றும் பூலாம்பட்டி சாலையில் தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி (GLR Boosting Station) ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி குளோரின் அமைப்புகள் செயல்பட தேவைப்படும் திரவ குளோரின் (Sodium Hypo-Chlorine Liquid) 2023—2024ம் ஆண்டிற்கு முதல்

பகுதியாக கொள்முதல் செய்யும் பணிக்கு ந.ம.தீ. எண்: 443 நாள்:28.07.2023 அன்று நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 17.08.2023–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி** | **மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | M/S ஸ்ரீராஜகணபதி இன்ஜினியரிங் ஓர்க்ஸ், 47, 5வது தெரு, சரஸ்வதி நகர் ஆவடி, சென்னை 600 054. | ரூ.5.00 | –0.54 குறைவு |
| 2 | M/S ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் ஓர்க்ஸ்,17,ஏஜிடி நகர், சென்னை 600 054. | | +1.20 அதிகம் |

அலுவலககுறிப்பு

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S ஸ்ரீராஜகணபதி இன்ஜினியரிங் ஓர்க்ஸ், சென்னை. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 948/2023/இ1)

| **தீர்மான எண்:460** | **நாள். 31.08.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 7

இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண்.ஈப்பு வாகனம் எண்.TN 52 D 4129-ன் ஏசி கம்பர்சர் பழுது ஏற்பட்டதால் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான SKS India Private Limited, சேலம் நிறுவனத்தின் மூலம் புதியதாக மாற்றப்பட்டதற்கு பட்டியல் எண்.RO24O006269, நாள்.26.07.2023ன் படி செலவு தொகை ரூ.93,562/– யை SKS India Private Limited, சேலம் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட வாகனம் எண்.TN 52 D 4129-தை உடன் எடுத்த வர அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையான SKS India Private Limited, சேலம் நிறுவனத்திற்கு செலவு தொகையினை பொது நிதியிலிருந்து ரூ.93,562/–யை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.976/2023/இ2)

| **தீர்மான எண்:461** | **நாள். 31.08.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 8

இந்நகராட்சி ஈப்பு எண்.TN52AB2075 என்ற வாகனத்திற்கு நகர்மன்ற தலைவரின் ஆலோசணையின் படி இருக்கைகள் மற்றும் சீட் கவர்கள் புதியதாக மாற்றி அமைக்க தெரிவிக்கப்பட்டது, அதன் படி மேற்காணும் வாகனத்தை கோவையில் உள்ள Koyas & Sons, Ameco Liners மற்றும் Auto&Machinery Equipment Company நிறுவனங்கள் மூலம் மேற்கொண்டமைக்கு கீழ்காணும் விபரங்கள் படி செலவு தொகை ரூ.88,200/–தை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Koyas & Sons, Coimbatore | KS 012 / 03.08.2023 | ரூ.**880/–** |
| 2 | Ameco Liners, Coimbatore | AL 20 / 03.08.2023 | ரூ.**47,820/–** |
| 3 | Auto&Machinery Equipment Company, Coimbatore | 015 / 03.08.2023 | ரூ.**39500/–** |
| | | **மொத்தம்** | **ரூ.88,200/–** |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட ஈப்பு எண்.TN52AB2075 என்ற வாகனத்திற்கு உடன் எடுத்த வர அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் நிறுவனங்களுக்கு பட்டியலின் படி மொத்த செலவு தொகை ரூ.**88,200/–**யை பொதுநிதியிலிருந்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1336/2023/இ2)

| **தீர்மான எண்:462** | **நாள். 31.08.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 9

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.14, 15 மற்றும் 22 ஆகிய பகுதிகளில் உள்ள சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளது அதனால் அப்பகுதி பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. எனவே, மேற்காணும் அப்பகுதியில் புதியதாக சிறுபாலங்கள் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1283 /2023/இ2)

| **தீர்மான எண்:463** | **நாள். 31.08.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 10

இடைப்பாடி நகராட்சி வார்டு எண். 24 ஆலச்சம்பாயைளம் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து தற்போது பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அதில் உள்ள செப்டிக் டேங் RCC Roof சிதலமடைந்தும், பொதுமக்கள் பயன்படுத்தும் கழிவறைகள் பழுதடைந்தும் உள்ளது. மேற்காணும் பணிகளை சரிசெய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1294 /2023/இ2)

| **தீர்மான எண்:464** | **நாள். 31.08.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 11

இடைப்பாடி நகராட்சி வார்டு எண். 24 பகுதியில் உள்ள எட்டிகுட்டை முனியப்பன் கோயில் அருகில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்வசதி மற்றும் குடிநீர் தொட்டி (HDPE) அமைப்பதற்கும் மேலும், வார்டு எண். 9 நைனாம்பட்டி பகுதியில் புதிய குடிநீர் தொட்டி (HDPE) பெருத்துவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.45 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1295/2023/இ1)

| தீர்மான எண்:465 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 12

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடி வெள்ளாண்வலசு கடை எண்.6 திரு.ரா முருகன் த/பெ. ராஜா என்பவர் பெயரில் இருந்து வந்தது. மேற்கண்ட கடை கடந்த நான்கு மாதங்களாக வாடகை செலுத்தாமல் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது. மேற்கண்ட கடை 05.08.2023 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது. எனவே கடை எண்.6 ற்கான கேட்பினை வருங்காலங்களில் ரத்து செய்யவும், புதிய ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி கடைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1014/2019/பி4)

| தீர்மான எண்:466 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 13

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமை. வாரச்சந்தை அருகில் உள்ள ஆடு அடிக்கும் தொட்டி சுங்கம் வசூலிக்கும் உரிமை மற்றும் பேருந்து நிலையத்தில் மேற்குப்புறம் அமைந்துள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை ஆகியவைகள் துறைமூலம் வசூல் செய்யப்பட்டு வருவதால் அவற்றிக்கான கட்டண ரசீது (டோக்கன்) அச்சடிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ70000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1449/ 2023 / பி4)

| தீர்மான எண்:467 | நாள். 31.08.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 14

அரசாணை (நிலை) எண்:64 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்22.05.2023ன் படி இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் அமைத்து செயல்பட்டுவரும் வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டங்கள் வருடத்தில் கீழ் காணும் நான்கு

தினங்களில் நடத்திட வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | கூட்டம் நடத்த வேண்டிய காலம் | நாள் | முக்கியதுவம் |
|---|---|---|---|
| 1. | ஜனவரி முதல் மார்ச் | ஜனவரி 25 | தேசிய வாக்காளர் தினம் |
| 2. | ஏப்ரல் முதல் ஜூன் | ஏப்ரல் 14 | டாக்டர்.அம்பேத்கார் பிறந்த தினம் |
| 3. | ஜூலை முதல் செப்டம்பர் | செப்டம்பர் 15 | பேறறிஞர் அண்ணா பிறந்த தினம் |
| 4. | அக்டோபர் முதல் டிசம்பர் | டிசம்பர் 10 | மனித உரிமைகள் தினம் |

அலுவலககுறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 879/2022/அ2)

| தீர்மான எண்:468 | நாள். 31.08.2023 |
|---|---|
| படித்து பதிவு செய்யப்பட்டது | |

ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி